விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 343 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 11 வியாழக்கிழமை (27.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# மாவீரர் நாள் இன்று

- துயிலும் இல்லங்கள் அனைத்தும் நினைவேந்தலுக்கு தயார்.
- மாலை 6.05 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்படும்.



(யாழ்ப்பாணம்)

தாயகக் கனவுடன் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவேந்தல் தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## 100 போதை மாத்திரைகளுடன்
### சுன்னாகத்தில் யுவதி கைது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் 100 போதை மாத்திரைகளுடன் யுவதி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.போதனாவில்
## காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்

15ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறையில் விமரிசையாக பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு




15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசத்தின் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து
### சபையில் கஜேந்திரகுமார், ரவிகரன்

(கொழும்பு)

ஈழத் தமிழ்த் தேசத்தின் தலைவரும் உலகத் தமிழர்களின் தலைவருமான தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் நேற்று வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் தனது சபை விவாதத்தை ஆரம்பித்தார்.

அதேவேளை வன்னி மாவட்ட பாராளுமன்ற

15ஆம் பக்கம் பார்க்க

### மாவீரர் தினமான இன்று
## யாழிலுள்ள் கடைகளை 2 மணியுடன் மூடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினமான இன்று யாழிலுள்ள கடைகளை பிற்பகல் 2 மணியுடன் மூடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களுக்கும் யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

15ஆம் பக்கம் பார்க்க

## தீவிர காற்றழுத்த தாழ்வுநிலை புயலாக மாற்றம் பெறுகின்றது
### வடக்கில் கனமழை கிடைக்கும்
### கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவிர காற்றழுத்த தாழ்வுநிலை புயலாக மாற்றம் பெறவுள்ளதால் வடக்கு மாகாணத்தில் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே மறுஅறிவிப்பு வரைகடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலை கடற்கரை புத்தர் சிலை விவகாரம்
### ஜனவரி மாதம் வழக்கு ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலைக் கடற்கரையோரமாக உள்ள ஸ்ரீசம்புத்த ஜயந்தி போதி ராஜ விகாரையின் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதிக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் திகதியிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது

16ஆம் பக்கம் பார்க்க

### நாவாந்துறையில்
## ஐஸ் போதையுடன் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் ஐஸ்போதைப்பொருளுடன் 5 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

### சீரற்ற காலநிலையால்
## யாழில் 219 குடும்பங்களை சேர்ந்த 706 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக 219 குடும்பங்களைச் சேர்ந்த 706 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு நேற்று மாலை 4.30 மணி வரை கிடைத்த சேத விபரங்களின் நிலைவரமே இதுவாகும்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலங்கு வானூர்தி மூலம்

## நெடுந்தீவிலிருந்து உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நேற்று இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் உலங்கு வானூர்தி மூலம் எடுத்து செல்லப்பட்டன.

பரீட்சை நிறைவடைந்ததும் தினமும் கடற்படை படகு மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற விடைத்தாள்கள் நேற்றைய தினம் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக கடல் வழியாக எடுத்துச்செல்ல முடியாமையால் விசேடமாக உலங்கு வானூர்தி மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

நெடுந்தீவு மகா வித்தியாலத்தில் உயர்தரப் பரீட்சை இடம்பெற்று வருகின்ற நிலையில் வித்தியாலய மைதானத்தில் உலங்கு வானூர்தி தரையிறக்கப்பட்டு விடைத்தாள்கள் வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ம-7,33)

## திருகோணமலையில் நபர் ஒருவர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம்

### முன்னாள் கடற்படை அதிகாரிகள் இருவர் கைது

திருகோணமலை கடற்படைத் தளத்தில் நிலத்தடி பதுங்கு குழியில் ஒருவர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக முன்னாள் கடற்படை வீரர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹப்புத்தளை மற்றும் சிலாபம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 41 மற்றும் 44 வயதுடைய இரண்டு முன்னாள் கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுத் துறையின் குழு கொள்ளை விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் நடத்திய விசாரணையைத் தொடர்ந்து இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.


பொலிஸ் விசாரணையில் அந்த நபர் 2010 ஜூலை மாதம் கடத்தப்பட்டு, திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள நிலத்தடி அறையில் அடைத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ம-7)


## இதய அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர் திரு. தே. தேவமோகன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் வைத்திலிங்கம் தேவராசா



அவர்கள் கடந்த 18.11.2025 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 01.07.1947 மறைவு 18.11.2025

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி

(C-4427)


சீரற்ற காலநிலையை எதிர்கொள்ள

## யாழ். மாவட்ட மக்களுக்காக துரித இலக்கம் அறிமுகம்

சீரற்ற காலநிலைகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில், பொதுமக்கள் அவசர உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் 0212117117 என்ற 24 மணி நேர அவசரத் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்த அபாய குறைப்பு நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே குறித்த துரித இலக்கமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் இலக்கம் ஊடாக பொதுமக்கள் எவ்வேளையிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரை தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. சிவகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் ரி. என். சூரியராஜா, அனர்த்த நிவாரண சேவைகள் மாவட்ட அலுவலர் திருமதி. ஆ.நளாயினி மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-7)


## மரண அறிவித்தல்



### இரத்தினராசா சின்னம்மா

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசா சின்னம்மா அவர்கள் நேற்று 26.11.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு - துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினராசாவின் அன்பு மனைவியும் இராகுலன்(தயா), ரசிகா(மாலா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வினோதினி, ஜெகன் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற செல்வதி, வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சரஸ்வதி, சின்னமணி, பரமேஸ்வரி, கலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கந்தசாமி, மலர், மகேஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ரஞ்சித், பரன், விபோதா, தேனுகா, குவின், சயன், நிக்சன், மதுசா, நிஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 27.11.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செட்டி வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 621 5377

(C-4433)



## ஓராண்டு நினைவு நாள்

அமரர் அமரசிங்கம் சண்முகலிங்கம் (வன்னியசிங்கம்)

மலர்வு : 1940.05.31 உதிர்வு : 2024.11.27



(C-4434)

மார்பில் சுமந்த மகனுக்கு மனதார
வீரவணக்கம் செலுத்தி விட்டு
சுடரேற்றி முடிந்ததும்
கார்த்திகை இருபத்தேழில்
விண்ணுலகம் சென்றதேனோ
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

4ஆம் வட்டாரம், முள்ளியவளை.

தகவல்: குடும்பத்தினர்



## ஏலவிற்பனை அறிவித்தல்

இடம் : பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை உப அலுவலகம்

திகதி : 2025.12.10 புதன்கிழமை

நேரம் :10.30 மணி

**பொருட்கள் :**

1. பழுதடைந்த இழுவை தண்ணீர் தாங்கிகள் - இரண்டு (Water Bowsher)
2. பழைய பத்திரிகைகள்

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் ரூபாய் 100.00 நுழைவுக் கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும். சித்தியெய்துபவர்கள் பணத்தினை முழுமையாக செலுத்தி அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி.


27.11.2025

(C-4428)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்..."

# தேச விடுதலை நாயகர்க்கு எம் தேசம் விழிநீர் சொரிகிறது





**ஜெயம் ஜெகன்**

மௌனம் சுமந்த அந்த வித்துடல் தேசம், அங்கே மனித மனத்தில் எழும் உணர்வின் வார்த்தைகள் தன் உணர்விழந்து செத்துக்கிடந்தது.

மனங்களில் தாங்க முடியாத குமுறல்கள் தொண்டையில் வந்த வேகத்தில் வாயடைத்துக் கண்களில் நீர் சுமந்து நின்றன. கைகளில் ஒளி வத்திகளுடன் நம் உயிர் காவிய உடல்களைத் தொலைத்ததினால் உளம் சோர்ந்து, உடல் கனத்து நின்றனர்.

விடிவுக்காய் உயிர் கொடுத்து தாய் மண்ணின் மானம் காக்க இன்னமும் தொப்புள் கொடி அறுபட்டுப் போகாமல் துயிலுமில்லக் கருவறையில் கல்லறைகளாக எம் மண்ணின் பூபாளக் கனவுகளுடன் தூங்கும் தம் உறவுகளுக்காய் அன்னையர், தந்தையர் இன்னும் ஓராயிரம் உறவுகள்.

அலை தடவி, மண்ணின் மடி தவழ்ந்து மலர்களின் மணம் சுமந்து வந்த காற்றின் இளவல் கூட மௌனமாக அஞ்சலி செலுத்திச் சென்றன. வானம் தன் இமைகளை மூடி மெல்லக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. கவிஞர். புதுவை இரத்தினதுரை அவர்களின் கவி வரியும் இசைவாணர் கண்ணன் அவர்களின் இசையமைப்பிலும் உருவான பாடல் மேலும் எம் எல்லோரையும் அமைதியாக்கிய எம் இதயத்தைக் கனக்க வைத்தது. ஒற்றை வரியேனும் நெஞ்சை விட்டு விலகாது மூளையில் பதிவாகி நீள ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**"தாயகக் கனவுகளுடன் சாவினைத் தழுவிய**
**சந்தணப் பேழைகளே! இங்கு**
**கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?**
**குழியினுள் வாழ்பவரே!**
**உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்**
**உறவினர் வந்துள்ளோம்–அன்று**
**செங்களம் மீதிலே உங்களோடாடிய**
**தோழர்கள் வந்துள்ளோம்**
**எங்கே! எங்கே! ஒரு தரம் விழிகளை**
**இங்கே திறவுங்கள்**
**ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே**
**மறுபடி உறங்குங்கள்..."**

இன்று மாவீரர் நாள். உங்களைத் தந்து நீங்கள் உள்ளுக்குள் உறங்குகிறீர்கள். உதிரத்தால் ஈழம் எழுதி உயர்ந்து கொண்டீர்கள். தேசத்தில் நெருப் பெரிந்த பொழுது உங்கள் தேகத்தை எரித்தீர்கள். தியாகச் செம்மல்களின் நாளிது. விடுதலை வேண்டி வித்துடல் கொண்ட வீரர்களின் நினைவழியா நாளிது. எத்தனையோ துன்பங்களையும் சுமந்து எம் துயர் களைந்து துயிலுமில்லம் விளைந்த வேங்கைகளே! தாய் மண் அழுத போது சுதந்திரக் காற்றை செந்நீரால் எழுதியவர்களே! எத்தனை கனவுகளைக் கண்டிருப்பீர்கள். ஏக்கங்கள் ஆயிரம் கொண்டிருப்பீர்கள். பெற்றவர் உறவுகள் பிரிந்து வந்தீர். ஒரு புன்னகைக்குள் புயல்மூடி வைத்தீர்கள். அத்தனை சுமையையும் ஏன் சுமந்தீர்கள். எம் அன்னை மண் விடுதலை வேண்டியல்லோ? செத்தவர் என்று உம்மைச் செப்புவமோ இந்த சென்மத்தில் நினைந்திடத் தப்புவமோ? குத்து விளக்கும் நீரல்லவோ? நாம் கும்பிடும் தெய்வமும் நீரல்லவோ? நித்தமும் வாழுவீர் மாவீரர்களே எம் நெஞ்சுகளில்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் 29 இடங்களில் மாவீரர் துயலும் இல்லங்கள் காணப்பட்டாலும் **மக்கள் உணர்வுடன் பல்வேறு இடங்களில் மாவீரர் நாளினை நினைவு கூருகின்றார்கள். மாவட்ட ரீதியாக துயிலுமில்லங்கள் வருமாறு:**

**யாழ்ப்பாண மாவட்டம்.**

1. கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம், 2. எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், 3. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம், 4. உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம், 5. சாட்டி மாவீரர் துயிலும் இல்லம்

**முல்லைத்தீவு மாவட்டம்**

6. ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், 7. வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், 8. முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம், 9. தேராவில் மாவீரர் துயிலும் இல்லம், 10. தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லம், 11. இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம், 12. இரட்டை வாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம், 13. முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லம், 14. அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம், 15. களிக்காடு மாவீரர் துயிலும் இல்லம், 16. மணலாறு மாவீரர் துயிலும் இல்லம்,

**கிளிநொச்சி மாவட்டம்**

17. முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், 18. கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம்,

**மன்னார் மாவட்டம்**

19. ஆண்டான்குளம் மாவீரர் துயிலும் இல்லம், 20. பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லம்,

**வவுனியா மாவட்டம்**

21. ஈச்சம்குளம் மாவீரர் துயிலும் இல்லம்,

**மட்டக்களப்பு மாவட்டம்**

22. தரவை மாவீரர் துயிலும் இல்லம், 23. தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம், 24. வாகரை மாவீரர் துயிலும் இல்லம், 25. மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லம்,

**திருகோணமலை மாவட்டம்**

26. ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், 27. தியாகவனம் மாவீரர் துயிலும் இல்லம், 28. வெள்ளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்

**அம்பாறை மாவட்டம்**

29. கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லம்,

### இளமைக்கால இனிமைகள் யாவும் திறந்த வேங்கைகளே!

விடுதலை போராட்ட வரலாற்றில் மாவீரர் பாடல்கள் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன அப்பாடல்களில் இடம்பெறும் வரிகளும் குரல்களும் இசைகளும் வலிமையானவை. உதாரணமாக ஒரு பாடலை முன் வைக்கலாம். இப்பாடலைப் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதினார்

"வேங்கைகளின் விடுதலை வேதங்கள்" என்ற ஒலிநாடாவில் மதுரக்குரலோன் எஸ்.ஜீ. சாந்தன் அவர்கள் பாடினார்.

***பின்வரும் மேகங்கள் பாடும்***
***மாவீரர்களின் நாமங்கள் கூறும்***
***கண்வழி கங்கைகள் பாயும்–இவர்***
***காவிய நாயகர் ஆகும்.***
***புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்***
***எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து வாருங்கள்"***

விதையுண்டு போன வீரப்பிள்ளைகளை எண்ணி வதையுண்டு கிடக்கிறது வாசல்கள். போர்க்களம் புகுந்து ஆவி கொடுத்தோரை அழைக்கும் நாள். துயிலுமில்லம் சென்று தொட்டெழுப்பும் நாள். மெல்லொலியால் உள்ளே மூச்சே கேட்கும் நாள். கார்த்திகை மாதத்து மழைத்தூறல் இந்த நாளுக்கான கண்ணீர் தான்.

**அழுதக்கெல்லாம் கழுவி அள்ளிச் செல்லவே வீதியெங்கும் வெள்ளம் பாய்கிறது. கோடி மலர்கள் கார்த்திகைகளில் பூப்பது வாடி விழவல்ல.** கல்லறைக்கென்றே செடிகள் கருத்தரிக்கின்றன. தனக்குள் உறங்கும் சந்தணமேனி குளிரட்டுமென நீரை உறிஞ்சிக் கொள்கிறது நிலம். கார்த்திகை இருபத்தேழு கண்ணீர் நாளல்ல... ஆயினும் நெஞ்சில் ஆயிரம் ஆணிகளேறுகின்றன. சிலுவையில் அறைவது போல் தேகம் வலிக்கிறது. யாருக்கென்று தான் அழிவது? எவருக்கென்று தான் ஏற்றுவது சுடர். எந்தக் கல்லறைக்குப் பூவாரியிறைப்பது வேரெல்லாம் ஒன்றான பின்னர் கிளைகளுக்குள்ளே பேதங்களேது? எல்லாக் கிளைகளும் எமது எல்லாப் பூக்களும் எமது எல்லாக் குழிகளும் எமது எல்லாப் பிள்ளைகளும் எமது கனவின் மொழியை ஒத்தெழுதிய கவிதைகளுக்கு அனற்சுடரேற்றி அஞ்சலிக்கின்றோம்.

கார்த்திகை இருபத்தேழு காவற்தெய்வங்களின் காணிக்கைத் திருநாள். ஊர்திரண்டு ஒப்பாரி வைப்பதில்லை. கூடிக்கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கிறது. சாவடைந்த பின்பும் இவர்களுக்கோர் சக்தியிருந்தது. இது கார்த்திகை மாதம் ஊர் முற்றமெங்கும் ஒளி வெள்ளம் சுடரேற்றி தொழுகின்றோம்.

பாட்டோடு சேர்ந்த பரவசம் உறவுகளே
கேட்கிறதா கோயில்மணி
கேட்கிறதா நெஞ்சிருக்கும் பாடல்
தெரிகிறதா சுடரும் நெய்விளக்கு

விடுதலைப்போரில் வேள்வித் தீயானீர், வீரமிகு போர்க்களத்தில் வேங்கையென நீரானீர், உயிர்க்கொடை தந்து ஈழத்தில் மாவீரரானீர், உள்ளத்தில் தமிழீழத் தாகமுடன் உயிர்தந்தீர். நிம்மதியாய் எம் தமிழர் நித்திரை செய்ய, நீளிரவு முடியும் மட்டும் காவல் செய்தீர், பதுங்கு குழியிலிருந்து பாதுகாப்பளித்திட்டீர், ஒதுங்கும் இடம் ஓய்வெடுக்க நீர் மறந்தீர். கார்த்திகை மாதத்தில் பூத்திடும் பூ வடிவில் நேர்த்தியாய் உம்முகம் நினைவு கொண்டு பார்க்கின்றோம், மாவீரர்களே உங்கள் மலரடிகள் தொழுகின்றோம், மாவீரர் உறங்குகின்ற மண்ணில் மலர் சாற்றி அழுகின்றோம்.

மலர்ந்து விடும் ஈழமென மனமகிழுந்து காத்திருந்தோம். உலர்ந்து விடாமல் உங்கள் ஈகமதைக் கைக்கொள்வோம். உறைந்து விட்ட நீரெல்லாம் உருகி ஒரு நாள் ஓடும், புதைந்து விட்ட மாவீரர் கனவுகளும் நனவாகும். சொல்லும் செயலும் ஒன்றாய் ஆனவர் மாவீரர். வெல்லும் வழியில் வரலாறாய் ஆனவர் மாவீரர், கொல்லும் எதிரியைக் கொன்றே ஒழித்தவர் மாவீரர், வெடித்திடச் செல்லும் வேளை தெரிந்தே சென்றவர் மாவீரர், சாதனை படைத்து சரித்திரம் படைத்தவர் மாவீரர். வேதனை வரினும் தாங்கியபடியே வெற்றியைப் படைத்தவர் மாவீரர், போதனை தந்திடும் தலைவனின் வழியில் பொங்கியெழுந்து போர்க்களமாடினார் மாவீரர்.

குதறுண்ட இரவுகளைக் குருதிகொண்டு கழுவியோரே! சிதறுண்டு வெடித்து விடுதலை நயந்தோரே! புயலில் அணையாத சுடரவனின் வழியில் புலியென புகுந்தீர்களே போர்க்களமாட, மானத்தைக் காக்க எழுந்த மறவர்களே, உயிர்தானம் செய்து வீழ்ந்த வீரர்க்ளே, அருமந்தவுயிரினை அகமகிழ்வுடன் அளித்து, அடிமை அகற்றிய விடுதலை வேதங்களே! மண் மீட்கும் போரில் மலர்ந்து வந்த பூ ஒன்று, கண்மூடித் தூங்கியதால் கலங்கி அழுது தவிக்கின்றோம். **விண்முட்டும் புகழோடு விதையாகிப் புதைந்தவரே, வீச்சாகி, உயிர் மூச்சாகி புயல் காற்றாகிப் பணி தொடர்வோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-20 உலக கிண்ணம்; வெளியானது அட்டவணை

2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள 8 மைதானங்களில் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

நரேந்திர மோடி மைதானம் (அஹ்மதாபாத்), சேப்பாக்கம் மைதானம் (சென்னை), அருண் ஜெட்லி மைதானம் (புது டெல்லி), வான்கடே மைதானம் (மும்பை), ஈடன் கார்டன்ஸ் (கொல்கத்தா), ஆர். பிரேமதாச மைதானம் (கொழும்பு), எஸ்.எஸ்.சி மைதானம் (கொழும்பு), பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானம் (கண்டி) ஆகிய மைதானங்களில் போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் போட்டித் தொடரில் பங்கேற்கும் 20 அணிகளும் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதில் குழு A இல் இந்தியா, அமெரிக்கா (USA), நமிபியா, நெதர்லாந்து, பாகிஸ்தான்

குழு B இல் அவுஸ்திரேலியா, இலங்கை, ஸிம்பாப்வே, அயர்லாந்து, ஓமன்

குழு C இல் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள்,பங்களாதேஷ், இத்தாலி, நேபாளம்

குழு D இல் தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், கனடா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் பலப் பரீட்சை நடத்தவுள்ளன.

இதற்கமைய பெப்ரவரி 7 முதல் 20 வரை 40 போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த கட்டத்திற்கு முன்னேறும்.

பெப்ரவரி 21 முதல் சூப்பர் 8 சுற்று ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கான முதலாவது போட்டி பெப்ரவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குறித்த போட்டியில் இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் பலப் பரீட்சை நடத்தவுள்ளன.

அத்துடன் இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் பெப்ரவரி 15ஆம் திகதி மோதவுள்ளன.

இந்தப் போட்டி கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

### முத்தரப்பு ரி-20 தொடர்

# சிம்பாப்வேயை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி!

**பாகிஸ்தானில் நடைபெறும் முத்தரப்பு ரி-20 கிரிக்கெட் தொடரின் 5 ஆவது போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**



பாகிஸ்தான், இலங்கை மற்றும் சிம்பாப்வே கிரிக்கெட் அணிகள் இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 5 ஆவது லீக் ஆட்டத்தில் சிம்பாப்வே, இலங்கை அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடி சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் சிக்கந்தர் ராசா 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பிரியன் பென்னட் 34 ஓட்டங்களில் வெளியேறினார். ரியான் பர்ல் 26 பந்தில் 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை சார்பில் மகேஷ் தீக்சனா, வஹிந்து ஹசரங்கா தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இலங்கை களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசங்க அதிரடியாக ஆடி அரை சதமடித்தார்.

அவருக்கு குசால் மெண்டிஸ் நன்கு ஒத்துழைப்பு அளித்தார். இறுதியில், இலங்கை அணி 16.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பதும் நிசங்கா 98 ஓட்டங்களும், குசால் மெண்டிஸ் 25 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இலங்கை அணி தான் ஆடிய 3 லீக் போட்டிகளில் ஒன்றில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. அடுத்து நடைபெறவுள்ள பாகிஸ்தானுடனான போட்டியில் இலங்கை அணி கண்டிப்பாக வெற்றி பெற வேண்டும். இல்லையேல் தனது ஓட்ட விகிதத்தை உயர்த்த வேண்டும். ஏனெனில் ஓட்ட விகித அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு சிம்பாப்வே அணி நுழைந்துவிடும். (3)

## செல்வருக்குச் செய்யும் கடன்!



மாவீரச் சுடர்கள் ஏற்றி,
மாதவர் பாதம் போற்றி,
பூவிதழ் யாவிலும் எழுது,
புண்ணிய சீலரை வாழ்த்தி.
காவியக் கொடையாய்த் தம்மைக்
காலத்திற்கு உவந்தோர், ஈழ
மா விலங்கு ஒடித்து வீர
மரபினைப் படைத்தோர் வாழி!

மாண்புறும் நெஞ்சும், கழுத்தில்
மாலையாய் நஞ்சும், எதிலும்
மேம்புறும் செயலும் : தம்மை
மீறிய திறனும் கொண்டு,
வானுறும் தியாகம் காத்த
வல்லமா ஈகம், உலகம்
காணுறக் கைதொழு தேற்று.
கடவுளாய்த் தினம்தாள் போற்று.

பிரிவினை எண்ணி: வீண்
பிளவுகள் பண்ணி எமக்குள்
சரிவினை உண்டு பண்ணும்
சதிகளை விட்டுத் தள்ளி
உறுதுணை நமக்கு நாமே
என்பதை உணர்தல் ஒன்றே
செருவினை வென்று மாண்ட
செல்வருக்குச் செய்யும் கடனாம்.

ஒற்றராய் இருத்தல் தானாம்,
ஒற்றுமை என்பதன் பதமாம்.
அற்பராய் நம்மை நாமே
அழிப்பதும் அழிவதும் விதியாம்.
பெற்றதாய் பிள்ளை போல
பெரும்படை ஆண்ட பூமி
அற்பபேர் புகழுக் காக
அழிவது என்ன நீதி?

கவிஞர் வேலணையூர் சுரேஷ்

## விடுதலை விதைகள்

செஞ் செடியினில் பூத்த மலர்கள்
இளந் தளிரிலே உதிர்ந்த இலைகள்
பூவாகி... காயாகி... கனியாகி... இந்த
மண்ணிலே வீழ்ந்த விதைகள்

இளமை இன்பத்தை இகழ்ந்தீர்
இனிமை உலகினை மறந்தீர்
மானிட விடுதலையை நினைந்தீர் - உயர்
மனிதர்க்காய் உயிர் துறந்தீர்

விடுதலை பெற்றிட விரைந்தீர் - தலைவன்
பாதையில் பண்புடன் நடந்தீர்
பாசறையில் போர்க் கலை பயின்றீர்
பகைவன்முன் பாய்ந்து போர் சமர் புரிந்தீர்

காவியத்தில் நீடித்து நிலைக்கும்
காலத்தால் அழியாத மறவர்
மாவீரர் புகழ் பாடியே ஏற்றுவோம் - சுடரை
இவ் வையகம் ஒளி பெறவே.

பெஞ்சிமுலையூர் தி-ராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையின்மைக்கு விரைவில் தீர்வு

## பிரதமர் ஹறிணி உறுதி

(கொழும்பு)

நாட்டில் தற்போது 365,951 பேர் வேலையில்லாமல் இருப்பதாகப் பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 ஆக இருந்த வேலையின்மை விகிதம் 2025 ஆம் ஆண்டில் 3.8 ஆகக் குறைந்துள்ளதாகவும் 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.7 ஆக இருந்த வேலையின்மை விகிதம் 2025 இல் 3.8 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

கல்வித் தகுதிகளின் அடிப்படையில் க.பொ.த சாதாரண தரத்திற்குக் கீழே உள்ள 103,308 பேரும் க.பொ.த சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்றவர்களில் 91,405 பேரும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையில் அடங்குவர்.

மேலும் க.பொ.த உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற 128,984 பேரும் இளங்கலைப் பட்டம் மற்றும் உயர் கல்வித் தகுதிகள் பெற்ற 42,254 பேரும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையில் அடங்குவதாகப் பிரதமர் தெரிவித்தார்.

இவர்களில், 12,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கு ஏற்கனவே வேலை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கும் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி வேலை வழங்கப்படும்.

இதற்கிடையில், ஆசிரியர் நியமனங்கள் தொடர்பான வழக்குகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், மேல்முறையீட்டு நீதிமன்றம் அதிகாரப் பூர்வமாக இது குறித்து அறிவித்தவுடன் ஆட்சேர்ப்பு தொடங்கும் என்றும் பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 100 | 200 | 180 | 80 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 | 170 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 320 | 250 | 200 | 200 | 180 |
| தக்காளி | 200 | 250 | 200 | 250 | 190 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 150 | 200 | 120 | 150 | 80 |
| கோவா | 180 | 150 | 200 | 200 | 120 | 130 |
| கரட் | 250 | 250 | 300 | 300 | 260 | 200 |
| பூசணி | 80 | 80 | 50. | 100 | 50 | 60 |
| புடோல் | 200 | 300 | 120 | 300 | -- | 180 |
| வாழைக்காய் | 100 | 70 | 50 | 150 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-350 | 200 | 400 | 200 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 | 200 | 180 | 140 |
| பாகற்காய் | 600 | 900 | 850 | 1200 | 800 | 550 |
| வெண்டக்காய் | 200 | 200 | 120 | 300 | 100 | 130 |
| கருணைக் கிழங்கு | 200 | 220 | 200 | 250 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 500 | 500 | 400 | 250 | 400 |
| லீக்ஸ் | 250 | 230 | 250 | 250 | 240 | 200 |
| பீற்றூட் | 300 | 200 | 120 | 200 | 200 | 150 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 400 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1500 | 1200 | 400 | 1200 | -- | 500 |
| போஞ்சி | 600 | 500 | 400 | 800 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 120 | 160 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 120 | 80-160 | 80 | 200 | -- | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 600 | 600 | -- | 450 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 120-150 | -- | 140 |
| இராசவள்ளி | 400 | 600 | 500 | 800 | -- | 700 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 180 | 150 | 200 | 150 | 75 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 100 | 60 | -- | 40 |
| வல்லாரை | 60 | 60 | 50 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 100-150 | 120 | 150 | -- | 80 |

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 - 06 - 1945



மறைவு
24 - 11 - 2025

### திருமதி கணேசமூர்த்தி பத்மாவதி

வரணியைப் பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி பத்மாவதி அவர்கள் 24.11.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதியரின் மகளும் சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் மீனவேணி, ஜெயவேணி, கமலவேணி, கலைவாணி, கருணாகரன், பத்மவேணி (ஆசிரியை - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரவேலு, சுத்தானந்தன், நகுலேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் வித்தியாசர், கிருத்திகன், விதூசிகா, அபிராமி, பிரியங்கா, அபிஷா, கேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2025 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 11.30 மணியளவில் குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடமியன்,
வரணி.

(C-4421)

தகவல்:
குடும்பத்தினர்
077 601 9284

## இராசிபலன்

27.11.2025
கார்த்திகை 11, வியாழக்கிழமை
சப்தமி முன்னிரவு 7.59 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 10.51 மணிவரை
சுப நேரம் 7.42-9.12 மணிவரை
இராகுகாலம் 1.42-3.12 மணிவரை

சுபமுகூர்த்த நாள்
சந்திராஷ்டமம்: புநர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதி நிலை உயர்ந்து திருப்தி கிடைக்கும் நாள், வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்** பொது வாழ்வில் புகழ் கூடும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**விருச்சிகம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

**கன்னி** பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வியாபார விருத்தியுண்டு, உறவினர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், போசன சுகமுண்டு.

**மீனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.

**தான் அறிவாளி என்ற மமதையில் உள்ளவன் எதையும் கற்றுக் கொள்ள முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரங்கப்போட்டி

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை பிரதேசசபை ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்தும் சதுரங்கச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யா/புலோலி மெ.மி.த.க படசாலையில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு 077 226 9799 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு



(பூநகரி)
பூநகரி வர்த்தக சங்கமும் ஆட்டோ உரிமையாளர் சங்கமும் இணைந்து நடத்திய மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பூநகரி, வாடியடிச் சந்தியில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் 150 இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (8-84)

# போதைப் பொருட்களுடன் கைது

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் இருந்து சூட்சுமமான முறையில் போதை மாத்திரைகளை கடத்தி வந்து விற்பனை செய்தவர் உள்ளிட்ட மூன்று பேர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மாசிக் கருவாடு சம்பல் போத்தலுக்குள் மறைத்து போதை மாத்திரைகளை கடத்தி வந்து விற்பனையில் ஈடுபட்டவரே யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

போதை மாத்திரை கடத்தல் மற்றும் விற்பனை செய்த சம்பவம் தொடர்பாக கைதான மூன்று பேரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இரண்டு கிராம் மற்றும் மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களும் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் கைதான ஐந்து பேரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

(அராலி)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு வெவ்வேறு இடங்களில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

மூளாய் - வேரம் பகுதியில் 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விற்பனை செய்பவர் என தெரியவந்துள்ளது.

மேலும் பொன்னாலை தெற்கு, சுழிபுரம் பகுதியில் 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு கைது நடவடிக்கைகளும் வட்டுக்கோட்டை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் இருவரிடமும் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# மருத்துவ உதவிக்கு நிதி வழங்கல்

(சாவகச்சேரி)
இரண்டு சிறுநீரகமும் செயலிழந்த வறுமை நிலையில் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் பெண் ஒருவருக்கு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கோரிக்கையின் பேரில் லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் மகிதரனால் மருத்துவ உதவிக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (8-30)

### நிலவும் சீரற்ற காலநிலையால்

# நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து பாதிப்பு

## மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**
**யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடற்போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளமையால் நெடுந்தீவு மக்களை மிக அவதானமாக இருக்குமாறு நெடுந்தீவு வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கைவிடுத்துள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சீரற்ற காலநிலையால் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இருந்து கடல் வழியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை இடமாற்றீடு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே நெடுந்தீவு மக்கள் அனைவரையும் விபத்துக்கள், பாம்பு கடி உள்ளிட்ட தவிர்க்க கூடிய நோய் நிலைகளை குறைத்து வீடுகளில் அவதானமாக இருக்குமாறு நெடுந்தீவு வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடற்போக்குவரத்து தடைப்பட்டுள்ள நிலையில் நெடுந்தீவு வைத்திய அதிகாரியினால் நோயாளிகளை யாழ்ப்பாணத்திற்கு மேலதிக சிகிச்சைக்காக வான் வழியாக அனுப்பி வைக்க விமான படையினர் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (8-33)

## மாவீரர்தினத்தை முன்னிட்டு

# இரத்ததான நிகழ்வு

(அராலி)
மாவீரர் தினத்தை முன்னிட்டு இரத்த தான நிகழ்வு நேற்று முன்தினம் நாகர் கோவில் குருகுலம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் நிதிப் பங்களிப்பில், வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களுக்கு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு பின் குருதித்தான நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் பங்கு கொண்ட குருதிக் கொடையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (8-104)



மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர் பெற்றோர், உரித்துடையவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு மானிப்பாய் திருவள்ளுவர் சன சமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

## வண்.பிரப்பங்குளம் வெள்ளவாய்க்கால்

# மழை நீர் தேங்கி நிற்பதால் டெங்கு பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் அமைந்துள்ள வெள்ள வாய்க்கால் நீண்ட நாட்களாக மழை நீர் தேக்கம் அடைந்து காணப்படுகின்றது. இதனால் கே.கே.எஸ். வீதி வழியாக வருகின்ற நீர் ஓடாது தேங்கி நிற்பதால் டெங்கு பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

**மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர் பெற்றோர்கள், உரித்துடையோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச மாவீரர் செயற்பாட்டு குழுவின் ஏற்பாட்டில் ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை சமூகத்திற்கு மனவேதனையை ஏற்படுத்த வேண்டாம்!

## இனவாதத்தை தூண்டும் ஞானசாரதேரர்



(கொழும்பு)

**திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் மற்றும் வாழைச்சேனையில் தொல்பொருள் பெயர் பலகைகள் அகற்றப்பட்டமை போன்ற சம்பவங்கள் ஊடாக பௌத்த, சிங்கள சமூகத்தை தூண்டி கோபத்துக்குள்ளாக்க முயற்சிக்கப்படு கிறது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.**

இராஜகிரியவிலுள்ள பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்ட சம்பவம் பௌத்தர்களின் உணர்வுகளைத் தூண்டும் ஒரு மிக முக்கியமான பிரச்சினையாகும். இது போன்ற விடயங்களைக் கையாளும் போது அரசாங்கம் விவேகத்துடனும் தூரநோக்குடனும் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் பல்வேறு குழுக்களும் சக்திகளும் தமது தேவைக்கேற்ப நிலைமையைக் கையாள இது வழிவகுக்கும்.


பெரும்பான்மை சமூகத்தினருக்கு மனவேதனையை ஏற்படுத்திய நடவடிக்கைகளாலேயே முந்தைய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு, நாடு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை எதிர் கொண்டது. திருகோணமலை போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து பௌத்த சிங்கள சமூகத்திலிருந்து வரும் ஆரவாரமும் கோபமும், அதிதீவிரவாதத்தின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களால் தமக்கான தீவிரவாத கருத்துகளுக்குத் தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களை விரைவாகச்சேர்ப்பதற்குப்பயன்படுத்தப்படுகிறது.

இளம் பிக்குகள் மற்றும் தேசிய அமைப்புகள் அமைதியாகவும் விழிப்புணர்வுடனும் இருக்குமாறும், பொலிஸால் கையாளப்பட வேண்டிய விடயங்களில் தேவையற்ற விதத்தில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். அவர்களது கோபமான எதிர்வினைகள், அவர்களை இனவாதிகள் அல்லது மத அடிப்படைவாதிகள் என்று முத்திரை குத்த விரும்புபவர்களின் கைகளுக்குள் விளையாட வழிவகுக்கும்.

30 ஆண்டுகாலப் போருக்குப் பிறகும், விடுதலைப் புலிகள் செய்த பல படுகொலைகளுக்குப் பிறகும் அவர்களை நினைவுகூர வேண்டிய தார்மீக அதிகாரம் இருக்கின்றதா? இந்த புதிய சித்தாந்தங்களை இப்போதே தோற்கடிக்கத் தவறினால், நாடு தவிர்க்க முடியாமல் ஒரு ஆபத்தான நிலைமைக்கு தள்ளப்படும். அத்தகைய சூழ்ச்சிகளுக்குத் தூண்டப்பட அனுமதித்தால், முந்தைய அரசாங்கம் சந்தித்த அதே வீழ்ச்சியை இந்த அரசாங்கமும் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கின்றேன்.

13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு பதிலாக அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி)


# கண்ணீர் அஞ்சலி



யா/கனகரத்தின மத்திய மகா
வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும்
நடன பாட ஆசிரியை
திருமதி. **சிவலோகநாதன் விஜயரஜினி**
அவர்களின் அன்பு மாமியார்

*அமரர்*


**சிங்காரவேலு சிவக்கொழுந்து**

அவர்கள் 20.11.2025 அன்று
சிவபதமடைந்தமையையிட்டு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்,**
**கல்வி சாரா ஊழியர்கள்**
**யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

(6029)

# கண்ணணீர் அஞ்சலி



தோற்றம் 25.04.1938

மறைவு 22.11.2025

யாழ்.சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும்,
கனகபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர். **நாகலிங்கம் சோதிநாதன்** அவர்கள்

(ஓய்வு நிலை அதிபர்)

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் முகாமைக்குழு உறுப்பினராக இருந்து ஆதரவற்றவர்களுக்கு ஆதரவுகாட்டி சேவையாற்றியவர் அமரர்.நா.சோதிநாதன் அவர்கள். அன்னார் எமது சிறுவர் இல்லத்தினது வளர்ச்சிக்காகவும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும் மிகவும் அர்ப்பணிப்போடு தன்னலமற்ற சேவையாற்றி இன்று எம்மையெல்லாம் மனங்கலங்க வைத்து மீளாத்துயில் கொண்டுள்ளார். அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரரது திருவடியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற பிரார்த்தித்து அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

*பிரிவால் துயருறும்*


**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**இல்லக் குழந்தைகள்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**

(C-44…)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரதமர் மோடி தலைமையில் ராமர் கோவில் கொடியேற்றம்!



அயோத்தி ராமர் கோவிலின் 161 அடி உயர கோபுரத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள 30 அடி உயர கம்பத்தில் நேற்று பிரதமர் மோடி கொடியேற்றினார்.

ராமர் கோவிலில் பிரதமர் மோடி, உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆர். எஸ். எஸ் தலைவர் மோகன் பகவத் ஆகியோர் வழிபாடு நடத்தினர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

அயோத்தி சென்ற பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு பூங்கொத்து கொடுத்து உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் வரவேற்றார்.

அயோத்தியில் ராமர் கோவிலின் 161 அடி உயர கோபுரத்தின் மீது 30 அடி உயர கம்பம் அமைக்கப்புட்டுள்ள நிலையில் கொடி ஏற்றுதல் விழா காலை 11:52 மணி முதல் பிற்பகல் 12:35 மணி வரை சுப முகூர்த்த நேரத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

ராமர் பிறந்த சூரிய குலத்தை குறிக்கும் வகையில் சூரிய சின்னம், மையத்தில் ஓம் மற்றும் மந்தாரை மரம் பொறிக்கப்பட்ட காவிக்கொடி உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# காசாவின் இருப்பு ...

# எச்சரிக்கை வி...



போரினால் பாதிக்கப்பட்ட காசா பகுதியை மீண்டும் கட்டியெழுப்ப 70 பில்லியன் டொலர்களுக்கு மேல் செலவாகும் என்றும், அதை முடிக்க பல தசாப்தங்கள் ஆகலாம் என்றும் ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில், காசாவில் நடந்த போரும், அந்தப் பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்ட தடைகளும் பாலஸ்தீனப் பொருளாதாரத்தை பேரழிவிற்கு உட்படுத்தியுள்ளன.

காசாவில் தொடர்ந்து, திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் அழிவு, அந்தப் பகுதி வாழத் தகுதியான இடமாகவும், சமூக ரீதியாக மீண்டும் கட்டியெழுப்பப்படவும் முடியுமா என்பதில் கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் ஒட்டுமொத்த மக்களும் கடுமையான, பல பரிமாண வறுமையை எதிர்கொள்கிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது.

மேலும், 2023 - 2024 ஆம் ஆண்டில் காசாவின் பொருளாதாரம் 87% சுருங்கியது என்றும், காசாவின்



## விண்வெளியில் சிக்கியுள்ள சீன வீரர்களை மீட்க விண்கலம் அனுப்பிய சீனா

(பீஜிங்)

விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா, சீனா உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் தீவிர ஆர்வம் காட்டுகின்றன. இதில் சீனா ஒரு படி மேலே ஏறி 2021ஆம் ஆண்டு தியாங்காங் என்ற விண்வெளி நிலையத்தை தனக்கென அமைத்துள்ளது.

சுமார் 390 கிலோ மீற்றர் உயரத்தில் உள்ள அங்கு சீன விண்வெளி வீரர்கள் தங்கி சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். அதன்படி கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி ஷென்சோ-20 என்ற விண்கலம் 3 விண்வெளி வீரர்களுடன் அனுப்பப்பட்டது.

கடந்த 5ஆம் திகதி இந்த விண்கலம் பூமி திரும்ப திட்டமிட்டு இருந்தது. ஆனால் விண்வெளி குப்பை மோதியதால் விண்கலம் சேதமடைந்தது. எனவே அந்த விண்கலம் பூமி திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனையடுத்து விண்வெளி நிலைய ஆராய்ச்சிக்காக 3 வீரர்களுடன் ஷென்சோ-21 விண்கலம் அனுப்பப்பட்டது. இதனால் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் 3 பேருக்கு பதிலாக 6 பேர் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதன்பிறகு தோங் தலைமையிலான ஷென்சோ-20 குழுவினர் ஷென்சோ-21 விண்கலம் மூலம் கடந்த 14ஆம் திகதி பூமி திரும்பினர். சாங் லூ தலைமையிலான ஷென்சோ-21 குழுவினர் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் தொடர்ந்து ஆராய்ச்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேசமயம் ஷென்சோ-21 குழுவினர் பூமி திரும்ப எந்த விண்கலத்துடனும் இணைக்கப்படவில்லை.

இதனால் அவர்களை மீட்க ஜியு குவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச்-2எப் ராக்கெட் மூலம் ஷென்சோ-22 என்ற விண்கலத்தை சீனா வெற்றிகரமாக நேற்று முன்தினம் அனுப்பியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஆபத்தில் உள்ளது
# டுக்கும் ஐ.நா!

**(காசா)** ▪▪▪▪▪▪▪▪▪▪▪▪▪▪ காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் பாலஸ்தீன பிரதேசத்தின் பொருளாதாரத்தை அழித்து அதன் இருப்பையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

மாத்த உள்நாட்டு உற்பத்தி வெறும் 161 டாலர் ஆக இருந்தது என்றும், இது லகளவில் மிகக் குறைவு என்றும் அறிக்கை கூறியுள்ளது.



பாலஸ்தீன சுகாதார அமைச்சக புள்ளி விவரங்களின்படி கடந்த 2 ஆண்டுகளில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 69,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே கடந்த மாதம் ஏற்பட்ட போர் நிறுத்தத்தை மீறி இஸ்ரேல் கடந்த 44 நாட்களில் 500 இற்கும் அதிகமான முறை தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். (நி)

## ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் தாக்குதல்

### 10 பேர் உயிரிழப்பு



(காபூல்) ஆப்கானிஸ்தானின் கோஸ்ட் மாகாணத்தில் பாகிஸ்தான் நேற்று முன்தினம் இரவு ட்ரோன் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது என்றும், இந்த தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக தலிபான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் வர்த்தக அமைச்சர் அல்ஹாஜ் நூருதீன் அஜீஸ் தற்போது இந்தியாவிற்கு வருகை தந்திருக்கும் போது இந்தத் தாக்குதல் நடந்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தானின் பெஷாவரில் துணை இராணுவ தலைமையகத்தில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் பொறுப்பேற்றது. இந்த அமைப்பினருக்கு ஆப்கானிஸ்தான் அடைக்கலம் அளிப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது.

இந்த சூழலில் தற்கொலை தாக்குதலுக்கு பதிலடியாக ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் நேற்று முன் தினம் இரவு தாக்குதல் நடத்தியுள்ளது.

முன்னதாக கடந்த மாதம் பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே எல்லையில் மோதல் வெடித்த நிலையில் கத்தார் மற்றும் துருக்கியின் மத்தியஸ்தத்துடன் இரு நாடுகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த சூழலில் போர் நிறுத்தத்தை மீறி தற்போதைய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தலிபான் அரசு குற்றம்சாட்டியுள்ள நிலையில், தாங்கள் எந்தத் தாக்குதலும் நடத்தவில்லை என பாகிஸ்தான் மறுத்துள்ளது. (நி)

## அமெரிக்காவின் மாற்றியமைக்கப்பட்ட அமைதித்திட்டம்

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வரவேற்பு

(கீவ்) ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கு தயார் செய்யப்பட்டு வரும் அமெரிக்காவின் மாற்றியமைக்கப்பட்ட அமைதித்திட்டத்திற்கு உக்ரைன் வரவேற்பு தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர 28 அம்சங்களைக் கொண்ட அமைதித்திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பரிந்துரை செய்தார். இந்தத் திட்டத்தை நவம்பர் 27ஆம் திகதிக்குள் ஏற்க வேண்டும், இல்லாவிட்டால் அந்நாட்டுக்கு அளித்து வரும் ஆதரவை நிறுத்தப் போவதாக ட்ரம்ப் கெடு விதித்து இருந்தார்.

ட்ரம்பின் இந்தப் பரிந்துரைகள் ரஷ்யாவுக்கு சாதகமாகவும், உக்ரைனுக்கு பாதகமாகவும் இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

இதனால், அமைதி திட்டத்தில் இடம்பெறும் அம்சங்கள் குறித்து ரஷ்யா மற்றும் உக்ரைன் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இருதரப்பினரின் கருத்துக்களைக் கேட்டு அதன் அடிப்படையில் அமைதித் திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அமைதித்திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட அம்சங்கள் ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கான மிக ஆழமான ஒப்பந்தம் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது அமெரிக்கா தலைமையில் உருவாக்கப்படும் அமைதி ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அம்சங்கள், போரை நிறுத்துவதற்கான ஆழமான ஒப்பந்தங்களாக விரிவுபடுத்த முடியும்.

இந்த விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடம் மேலும் தீவிர ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன். அமெரிக்காவின் பலத்திற்கேற்ப ரஷ்யா செயற்பட்டு வருகிறது. அமைதித்திட்டத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி ட்ரம்புடன் ஆலோசனை நடத்த தயாராக உள்ளேன்.

அமைதித் திட்டம் ஐரோப்பா பாதுகாப்பு முடிவுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதால் ஐரோப்பிய தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும், என அவர் தெரிவித்தார். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இரண்டு நாள் பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார்.

இந்த பயணம் எதிர்வரும் டிசம்பர் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் அமையவுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே உயர் மட்ட இராணுவ ஈடுபாடுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பரஸ்பர நம்பிக்கை, மூலோபாய சீரமைப்பு மற்றும் வளர்ந்து வரும் செயற்பாடுகள் ஆகிய வற்றை, இந்த பயணம் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக, இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. (நி)

# ஆட்டோவிலிருந்து தலையை வெளியே நீட்டிய சிறுமி

## அடுத்த நொடியில் நடந்த துயரம்

(களுத்துறை)

களுத்துறை - மில்லனிய - ரன்மினிக பகுதியில், பாலர் பாடசாலை பிள்ளைகள் பயணித்த முச்சக்கர வண்டியிலிருந்த சிறுமி ஒருவரின் தலை, டிப்பர் ரக வாகனத்தில் மோதியதில் அச்சிறுமி உயிரிழந்துள்ளார். குறித்த சிறுமி பாலர் பாடசாலை நிறைவடைந்ததும் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டி மில்லனிய ரன்மினிக பிரதேசத்தை வந்தடைந்தபோது, அதற்கு எதிர்த் திசையிலிருந்து ஒரு டிப்பர் ரக வாகனம் வேகமாக வந்துள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியின் பின் இருக்கையின் வலது பக்கத்தில் அமர்ந்திருந்த சிறுமி, வண்டியில் இருந்து வெளியே தலையை நீட்டியபடி வந்தபோது, எதிர்த் திசையில் வந்த டிப்பர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் 4 வயது சிறுமி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பாக டிப்பர் ரக வாகனத்தின் சாரதி மற்றும் முச்சக்கர வண்டியின் சாரதி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மில்லனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் வ/து

## பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

வடமாகாண சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய செயலாளர் (114/08) நிரந்தர பதவிக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி - செயலாளர் (114/08)**
2. **வெற்றிடம் - 01**
3. **சம்பள குறியீட்டு இலக்கம் - 114/08 (சுற்று நிருப இல 01/2021)**
4. **சம்பள அளவுத்திட்டம் - 35665-460X10-480X10-45065**
5. **தகைமைகள்**

A. கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் / நிர்வாக உதவியாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் முகாமை நிலைப் பதவியில்/ நிர்வாக உதவியாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

B. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்கு சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல், வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./
இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வியாபாரம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

C. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனமொன்றில் / வர்த்தக / கைத்தொழில் / நிர்வாக முகாமையாளர் / பணிப்பாளர் சபையின் செயலாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். / இதில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம். இதில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**6. பொதுவான நிபந்தனைகள்**

- வயதெல்லை 18-45 வயதிற்கிடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களிற்கு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.
- கூட்டுறவுச் சங்கத்தில் பணிப்புரிவோர் குறித்த சங்கத்தின் ஊடாக விண்ணப்படிவம் அனுப்பப்பட வேண்டும்
- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருப்பதுடன் வடமாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். உடல் மற்றும் உளத் தகுதிகளை கொண்டிருத்தல் வேண்டும், சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
- தாங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

**7. விண்ணப்பிக்கும் முறை**

- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை தலைவர், வடமாகாண சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், 2ஆம் மாடி, மாவட்ட கூட்டுறவுச் சபை கட்டிடம், A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**8. விண்ணப்ப முடிவுத்திகதி 17.12.2025**

**தலைவர்,
வடமாகாண சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க
சமாசங்களின் சம்மேளனம் வ/து,
2ஆம் மாடி, மாவட்ட கூட்டுறவுச் சபைக் கட்டிடம்,
A9 வீதி, கிளிநொச்சி.**

(C-4424)



# தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி(வ-து)

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

| | |
|---|---|
| **பதவி** | **: கணக்காளர் (நிரந்தரம்) - 01** |
| **சம்பள குறியீட்டு இலக்கம்** | **: 104/09** |
| **சம்பள அளவு திட்டம்** | **: 35200-450x10-460x10-44300** |
| **சுற்று நிருப இலக்கம்** | **: 02/2025** |

**தகைமைகள் :**

அ) கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் / கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்லான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 அண்டு கால அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/
க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு தொடர்பாக பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

**பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)**

01) பதவி: களஞ்சியப்பொறுப்பாளர் (நிரந்தரம்) ஆண் - ஒருவர்
குறியீட்டு இலக்கம் : 202/12
சம்பள அளவுத்திட்டம் : 33820-370X10-385X10-41370

**தகைமைகள் :**

அ.கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டப்பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

இ.கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம், தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்த 04 ஆண்டு கால அனுபவம்.

02) பதவி: களஞ்சிய முகாமையாளர் (நிரந்தரம்) ஒருவர் (ஆண்) (வடிகலன் இயக்குனர்)
குறியீட்டு இலக்கம்: 208/14
சம்பள அளவுத்திட்டம்: 32900-355X10-365X10-40100

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**பொதுவான நிபந்தனைகள்**

- வயதெல்லை 18-45 வயதிற்கு உட்பட்டவர்கள்
- தற்போது கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிபவராயின் வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- கொத்தணி எல்லைப்பரப்பிற்குள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய கூட்டுறவு நிறுவனங்களில் தற்போது பணியாற்றுபவர்களாயின் அச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்
- பதவிக்கு தெரிவு செய்யப்படின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கமைவாக நிர்வாகசபையால் விதிக்கப்படும் ரொக்கப் பிணையும், ஆதாரப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.
- தேவையான அனைத்து ஆவணங்களையும் பிரதிசெய்து இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி வரணி, எனும் முகவரிக்கு குறிப்பிட்ட திகதிக்கு பிந்தாது அனுப்புதல் வேண்டும்
- காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- விண்ணப் முடிவுத்திகதி 15-12-2025

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள - 021 205 0854

**க.செல்வேஸ்வரன்
தலைவர்**

(C-4423)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 • 11 • 1939



மறைவு 10 • 11 • 2025

### அமரர் கருணைபூஷணி கனகசுந்தரம்

எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத்தலைவி அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு, மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக அனுதாப செய்திகளை பகிர்ந்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியும் மலர்மாலைகள் அணிவித்தும் நேரில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவந்து இத்தால் நவில்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28.11.2025 வெள்ளிக் கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலைச் சந்தியடி
நாவலடி வீதி
மானிப்பாய்

(C-346)

தகவல்
குடும்பத்தினர்

## கருவி நிறுவனத்தின் பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக மாந்தர்கள் மத்தியில் மாற்றுத் திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் கருவி நிறுவனம் வருடம் தோறும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

குறித்த போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் எதிர் வரும் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு உரித்தான பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நடைபெற்று முடிந்த போட்டி முடிவுகளை அறிந்து கொள்ள விரும்புவோர் கருவி நிறுவனத்தின் தொலைபேசி இலக்கங்களான 021 205 4224 மற்றும் 076 551 5755 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென கருவி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 10 - 1943



உதிர்வு 07 - 12 - 2024

### அமரர். திருமதி. மனோன்மணி கனகநாயகம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/கரணவாய் மகா வித்தியாலயம்)

**திதி: கார்த்திகை வளர்பக்க சப்தமி, திகதி: 27.11.2025**

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு எம்மை வாழவைத்த எங்கள் அம்மா அமரத்துவம் எய்தி ஓராண்டு நிறைவில் எங்கள் மனமார்ந்த அன்பையும் நன்றியையும் உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

அம்மா அப்பா என்ற இரு தூண்களும் ஒரு தூணாக எம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிய எங்கள் அம்மாவின் பாச முகத்தினை நேசமுடன் நினைவு கூறும் உங்கள், பார்த்தீபன், காண்டீபன், ஜெயதீபன் மற்றும் சகோதரர், சகோதரி, பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அயலவர்கள், நண்பர்கள்.

(1713)

தகவல்: குடும்பத்தினர்.

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**49/9, 49/10, தாவளை வீதி, வட்டாரம் -01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, தாவளை வீதியிலுள்ள இல 49/09, 49/10 ஆகிய ஆதனங்கள் எமது ஆதனவரிப்பதி வேட்டின் பிரகாரம் A.S.K செல்லத்துரை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை கணபதிப்பிள்ளை கந்தசாமி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3265/03.07.2001 ஆம் இலக்க உறுதியால் கந்தசாமி பெண் அன்னலட்சுமி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4457/24.02.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த கணபதிப்பிள்ளை கந்தசாமி ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

சிவபாதம் கைம்பெண் கமலாம்பிகையும், சிறிகாந்தா அதிசயராணியும் ஆகியவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9341/ 17.03.2008 ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை நிபந்தனை அறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10340/12.01.2010 ஆம் இலக்க உறுதியால் குறித்த சிவபாதம் கைம்பெண் கமலாம்பிகையும், சிறிகாந்தா அதிசயராணியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

இரத்தினதுரை சிவகுமாரும் பெண் நந்தினியும் ஆகியவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14461/ 06.02.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை தவணை அறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1086/01.05.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த இரத்தினதுரை சிவகுமாரும் பெண் நந்தினியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

கதிரமலை ஸ்ரீவரன் பெண் லோசினி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் 1087/01.05.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

நடராசா வரதராசா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு செ.கனகசபாபதி முகதாவில் 1413/21.10.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த கதிரமலை ஸ்ரீவரனும் பெண் லோசினியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பொன்னையா உதயநேசனும் பெண் சசிவதனியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வி.இளங்குமார் முகதாவில் 634/ 11.02.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த நடராசா வரதராசா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை, சுப்பிரமணியம் யோகராசா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு செ.கனகசபாபதி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2079/ 08.02.2018 ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னுச்சாமி பத்மநாதனும் பெண் கேதீஸ்வரநாயகியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வயிரவநாதர் ஜெகமோகன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பிரதீபா கருணாகரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1817/25.07.2019 ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் யோகராசா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஆறுமுகம் விக்கினேஸ்வரனும் பெண் கார்த்திகாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் 1524/ 22.10.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த வயிரவநாதர் ஜெகமோகனும் பெண் ஜீவரட்சகியும், பொன்னையா உதயநேசனும் பெண் சசிவதனியும் ஆகியவர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட இரு பகுதி ஆதனங்களையும் ஒன்றிணைத்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "இறக்கப்பனை"
இறை: வட்டுக்கோட்டை கிழக்கு
விஸ்தீரணம்: நில.பர.இலா 5 குளி 5.17.
எல்லைகள்: கிழக்கு-குகதாஸ் பெண் பத்மாவதியின் ஆதனமும், பாதையும் வடக்கு-பாதையும், இராசையா குணசுந்தரியின் ஆதனமும், மேற்கும், தெற்கும் - பாதை
குறித்த ஆறுமுகம் விக்கினேஸ்வரனும் பெண் கார்த்திகாவும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆறுமுகம் விக்கினேஸ்வரனும் பெண் கார்த்திகாவும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்புடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(6027)

தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழிறங்கிய அணைக்கட்டு
## முன்னாயத்த நடவடிக்கை முன்னெடுப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அருகாமையில் ஏற்கனவே தாழிறங்கிய இடத்தில் கடற்கரை அணைக்கட்டு உடைந்து விழுந்துள்ளது.


உடைந்து விழுந்த பகுதிக்கு இரு பக்கமுமாக உள்ள அணைக்கட்டு எந்த நேரமும் உடைந்து விழும் நிலையில் காணப்படுகிறது.

அதுமாத்திரமல்லாது குறித்த பகுதி வீதி தாழிறங்கும் ஏதுநிலை காணப்படுகிறது.

இது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட தர்ப்பினருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் வருகைதந்து பார்வையிட்டதுடன் எச்சரிக்கை தடுப்புகளை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-8-60)

# போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சொந்தமான படகுகள் பறிமுதல்



(கொழும்பு)

"Dehi Bale" என்று அழைக்கப்படும் போதைப் பொருள் கடத்தல் காரருக்குச் சொந்தமான ஐந்து மீன் பிடி படகுகள் குற்றப் புலனாய்வுத் துறையின் சட்ட விரோத சொத்துக்கள் பிரிவால் கைப்பற்றப்பட்டுள்ளன.

திக்வெல்ல மீன்பிடித் துறை முகத்தில் நங்கூரமிட்டிருந்தபோது ஐந்து படகுகளும் கைப்பற்றப்பட்டதாக சிஐடி தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட படகுகளின் பெறுமதியானது சுமார் 200 மில்லியன் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. (நி)


# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் தி.சுதாகினி அவர்களின் அன்புத்தாயார்

அமரர்
**கந்தையா தங்கம்மா**

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் (6033)



# யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

எதிர்வரும் 13.12.2025 (சனிக்கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.


எனவே பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக இணைய விரும்புவோர் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**செல்வி. கி.தே.தேவராஜா (அதிபர் )**
**தலைவர், பழைய மாணவர் சங்கம்.**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.** (C-4426)


# வர்த்தக உலகம்

# உலக சந்தைப்படுத்தல் மாநாடு 2025 இன் அதிகாரப்பூர்வ வங்கிக் கூட்டாளராக இணைகிறது இலங்கை வங்கி!




இலங்கை வங்கியானது இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (SLIM) ஏற்பாடு செய்த உலக சந்தைப்படுத்தல் மாநாடு 2025 இன் அதிகாரப்பூர்வ வங்கிக் கூட்டாளராக பெருமையுடன் இணைந்தது.

முதல் முறையாக இலங்கையில் நடத்தப்பட்ட இந்த உலகளாவிய சிறப்புமிக்க நிகழ்வு 'மவுண்ட் லவினியா ஹோட்டலில்' அண்மையில் நடைபெற்றது.

ஆசிய சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு, ஆசிய சிறு வியாபாரக் கூட்டமைப்பு மற்றும் உலக சந்தைப்படுத்தல் மாநாட்டின் பிரதிநிதிகள் உட்பட 40 நாடுகளில் இருந்து 150 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றிருந்தனர்.

நவம்பர் 13 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது நாளின் முக்கிய உரையை "சந்தைப்படுத்தல் -தேசிய போட்டித்திறனையும் வளர்ச்சியையும் இயக்கும் சக்தி" எனும் தலைப்பில் இலங்கை வங்கியின் தலைவர் கவிந்த டி சொய்சா வழங்கினார். அவர் தனது உரையில், தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும், புதுமையை ஊக்குவிப்பதிலும், போட்டித்திறனை மேம்படுத்துவதிலும் சந்தைப்படுத்தல் துறைக்கு இருக்கும் முக்கிய பங்கினை வலியுறுத்தினார்.

குறித்த மாநாடு உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், தொழில்நுட்ப மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை வளர்த்தெடுக்கவும், புதிய வாய்ப்புகளை உருவாக்கவும் வலுவான தளமாக அமைந்தது.

மேலும், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகளுக்கு (SME, MSME) பயனுள்ள அறிவார்ந்த விடயங்களையும் கற்றல் வாய்ப்புகளையும் வழங்கியது. இதன் மூலம் இலங்கை, சந்தைப்படுத்தல் துறையில் சிறப்பும் உலகளாவிய ஒத்துழைப்பும் கொண்ட ஒரு வளர்ந்து வரும் மையமாக தன்னை வலுப்படுத்தியுள்ளது.

BANK OF CEYLON BOC




ஶ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் நிறுவனம், மதிப்புமிக்க SLIM தேசிய விற்பனை விருதுகள் 2025 இல் ஒரு மகத்தான சாதனையைப் பதிவு செய்தது, அதன் விற்பனைக் குழு இந்தத் துறையில் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு சிறந்து விளங்கியதற்காக அங்கீகரிக்கப்பட்டது.

பிராந்திய மேலாளர் பிரிவில் எஸ்.ஏ. ஜோசுவா (SLIC லைஃப் பேங்கஷ்ரன்ஸ் - தொகுதி மேலாளர்) வெள்ளி விருதைப் பெற்றார். அதே நேரத்தில் விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் திருமதி. எஸ்.ஜே. பிரசாந்தி (SLIC லைஃப் பேங்கஷ்ரன்ஸ் – பிராந்திய மேலாளர்) வெள்ளி விருதைப் பெற்றார்.





tpl EXPERIENCE CENTER நிறுவனத்தின் கிளை டச்சுவீதி, இருபாலைச் சந்தி யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது. இந்தக் கிளையின் ஊடாக cummins பிரச்சினைக்கான தீர்வுகள், Fleetguard வடிகட்டுதல், schindler பிரச்சினைக்கான தீர்வுகள், Lovol கனரக இயந்திரம் தொடர்பான சேவைகள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மகிமை இருக்கிறது. - மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்தனப் பேழைகளில் உறங்குகின்ற உத்தமர்களே!

தாயகக் கனவோடு களமாடி காவியமாகிய எங்கள் மாவீரர்களை ஏற்றியும் போற்றியும் வழிபடுகின்ற நாள் இன்று.

அந்தப் புனிதமான நாளில் மாவீரர் துயிலு மில்லங்கள் தோறும் சுடரேற்றி அவர்களை நினைந்துருகுகின்ற அந்தக் கணப்பொழுதை அகத்தால் உணர்தலன்றி, மொழியால் கூறு தல் யார்க்கும் அரிய.

ஆம், மாவீரர்கள் எங்கள் தமிழினம் வாழ் வதற்காக களமாடிய மறவர்கள். அவர்கள் தங்கள் இனத்தின் மீதும் மொழியின் மீதும் கொண்டிருந்த அளவு கடந்த பற்றுதலுக்கு அப்பால், தங்களை இழந்தேனும் தமிழ் மக் களை வாழ வைக்க வேண்டும் என்று நினைத்த உத்தமர்கள். அதற்காக தங்கள் இன்னுயிரை விடுதலை வேள்வியில் ஆகுதி யாக்கிய வேங்கைகள்.

ஆம், எந்தவித சுயநலமும் இன்றி தாயக விடுதலையை மட்டுமே தங்கள் கனவாக இத யத்தில் சுமந்த ஒப்பற்ற தியாகிகள் இப்போது சந்தனப்பேழைகளில் உறங்குகின்றனர்.

ஓ! மாவீரர்களே இன்று 2025 நவம்பர் 27. மாலை 6.05 மணி நீங்கள் துயிலெழும் நேரம்.

ஆம், சந்தனப்பேழைகளில் அமைதியாய் உறங்குகின்ற நீங்கள், உங்கள் அன்புக்குரிய வர்களின் கண்ணீர்த்துளிகளில் நனைந்து துயிலெழுவீர்கள்.

நீங்கள் எழுகின்றபோது ஓ! என் தமிழினம் விடுதலை பெற்றிருக்கும் என்ற நினைப்புட னேயே கண்மலர்வீர்கள் என்பது நமக்கு நன்கு தெரியும்.

ஆயினும் உங்கள் தியாகம் தமிழ் அரசியல் வியாபாரிகளிடமும் தரகர்களிடமும் அகப்பட்டு அவை அர்த்தமற்றுப் போயிருப்பதை நீங்கள் அறியும்போது நிச்சயமாக நீங்கள் வெதும்பு வீர்கள் – கண்ணீர் விடுவீர்கள்.

அந்தக் கண்ணீர் சுயநலமற்றது. உங்கள் உறவுகளுக்கானதுமன்று. மாறாக, அது நீங் கள் உங்கள் உயிரைவிட – உற்ற உறவுகளை விட, நேசித்த ஈழத் தமிழினம் இன்னமும் விடி வின்றி, வாழ வழியின்றி, நாடின்றி, நமக்கென் றொரு தலைமையின்றி அந்தரித்து நிற்பது கண்டு நெஞ்சம் உருகி நினைந்தழுகின்ற கண்ணீர்.

உண்மை. உங்களுக்காக நாம் கண்ணீர் விடும் போதும், நீங்கள் தாயகத்திற்காக கண்ணீர் சிந்தும் வள்ளல்கள்.

ஆம், சந்தனப்பேழைகளில் உறங்குகின்ற மாவீரர்களே! உங்கள் விழிப்பு உங்கள் உறவு களுக்காக – உங்களை இதயபூர்வமாக நேசிக் கின்றவர்களுக்காக மட்டும் இருக்கட்டும்.

ஏனெனில் உங்களை உச்சரிப்பவர்கள் எல்லோரும் தூயமனத்துடன் உள்ளவர்கள் என்று நம்பிவிடாதீர்கள்.

ஏனெனில் எங்கள் தாயகத்தில் நீங்கள் இல்லாத காரணத்தால் சுயநலமே மேலோங்கி கோலோச்சுகின்றது.

ஆகையால் துயிலெழுந்த மாவீரர்களே அமைதியாய் உறங்குங்கள். உங்கள் தியாகம் என்றோ ஒருநாள் உச்சம் தொடும்.

## கைப்பற்றப்படும் போதைவஸ்தை விரைந்து அழிக்கப் புதிய சட்டம்

### ஜனாதிபதி அநுர மந்திராலோசனை

(கொழும்பு)

போதைப்பொருள் அச்சுறுத்தலை விரை ந்து ஒழிக்கும் நோக்கு டன் பறிமுதல் செய்யப் படும் போதைப்பொருட் களை உடனடியாக அழிப்பதற்கான புதிய சட்டங்களை உருவாக் குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள் ளார்.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப் பதற்காக உருவாக்கப் பட்ட தேசிய வழிநடத் தல் குழுவின் இரண்டா வது அமர்வு ஜனாதிபதி செயலகத்தில் கூடிய போதே ஜனாதிபதி இவ் வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு மேலும் கருத் துரைத்த ஜனாதிபதி,

போதைப்பொருள் பறிமுதல் செய்யப்படும் போது, நீதிவான் ஒருவர் சம்பவ இடத்தில் விசா ரணை நடத்தவும் பகுப் பாய்வாளர் ஒருவர் மாதி ரியைப் பெறவும் பின்னர் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் அழிக் கப்படும் வகையில் சட் டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

போதைக்கு அடிமை யானவர்களின் மறு வாழ்வு குறித்து சமூகத் தில் பல்வேறு கருத்துக் கள் இருப்பதாகவும் அவை சில நேரங்களில் முரண்பாடாக இருப்ப தாகவும் சுட்டிக்காட் டிய ஜனாதிபதி அரசு மற்றும் அரசு சாரா நிறு வனங்கள் உட்பட அனைத்துத் தொடர்பு டைய நிறுவனங்களை யும் ஒன்றிணைத்து அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு புதிய வேலைத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)

## வெளுத்து வாங்கும் கனமழை தண்ணீரில் மூழ்கியது கிழக்கு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத் தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ள துடன் சில இடங்களில் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று காலையில் காற்றுடனான கடும்மழை பெய்துவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத் தில் எட்டு பிரதேச செய லகப் பிரிவுகள் வெள்ள அனர்த்தத்தினால் 62 குடும்பங்களைச் சேர்ந்த 210 நபர்கள் பாதிக்கப்பட் டுள்ளதுடன் 36 குடும் பங்களைச் சேர்ந்த 132 நபர்கள் உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 26 வீடுகள் சுழல் காற்றினால் பகுதியள வில் சேதமடைந்துள் ளன என மாவட்ட அனர் த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத் தில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக

தற்போது, 482 குடும் பங்களைச் சேர்ந்த 1550 பேர் பாதிக்கப்படும் அபா யத்தில் உள்ளனர்.

கடும் காற்று மற்றும் மழையால் மாவட்டத் தில் இதுவரை 18 வீடு கள் பகுதியளவில் சேத மடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் அதி காரி திலின விக்கிரம ரத்ன அறிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் கனமழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக மரம் முறி ந்து வீழ்ந்ததில் வீடொ ன்று பகுதியளவில் சேத மாகியுள்ளதாகவும் பாலத்தோப்பூர் பகுதி யிலுள்ள சுமார் 05 வீடு கள் அளவில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது.

எனினும் இடப்பெயர் வுகள் எதுவும் இடம்பெற வில்லை என மாவட்ட அனர்த்த முகாமைத்து வப் பிரிவு தெரிவித்துள் ளது. (ம-7)

## தேவாலயத் தலைவர் சுட்டுப்படுகொலை

### இரண்டு பேர் கைது

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடை மோதரை தேவாலய நிர் வாகக் குழுவின் தலை வர் சுட்டுக்கொல்லப் பட்ட சம்பவம் தொடர் பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி குற்றப் புலனாய் வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்குக் கிடை த்த இரகசியத் தகவலை யடுத்து கொலைச் சம்ப வத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரும் சந்தேக நபர் தப்பிச் செல்ல உதவிய மற் றொரு நபருமே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களில் கொலை யுடன் தொடர்புடைய சந் தேக நபர் மீட்டியா கொடையைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனவும் தப்பிச் செல்ல உதவிய தாக கைதானவர் கதிர் காமத்தைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7)

## ரயிலுடன் மோதிய லொறி; பெண்ணொருவர் மரணம்

(சிலாபம்)

சிலாபம், இனிகொட வெலப் பகுதியில் நேற்று (26) ரயில் கடவை யொன்றைக் கவனயீன மாகக் கடக்க முயன்ற சிறிய ரக லொறி ஒன்று ரயிலுடன் மோதி விபத் துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கோர விபத் தில் லொறியில் பயணி த்த பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

லொறியின் சாரதி பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

சம்பவம் குறித்து சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

JSAC
இணையத்தில் செயற்படும்போது அல்லது பகிரும்போது நெறிமுறைகளை பின்பற்றுங்கள். தவறான வார்த்தைகள், பகிர்வுகள் மிகப்பெரிய காயங்களை ஏற்படுத்தும்.
16 2025

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025
"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"
- கவிஞர் புதுவை இரத்தினதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

10

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1949 ஜூன் 18 இல் நடைபெற்ற பாராளுமன்ற இடைத் தேர்தலில் கண்டியின் சுயேச்சைப் பிரதிநிதியாக இளங்கரத்ன தேர்ந்தெடுக்கப்பட்டார், அங்கு அவர் 10,062 வாக்குகளைப் பெற்றார் (மொத்த வாக்குகளில் 50.75%). 1952 இல் நடந்த 2 ஆவது பாராளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி (UNP) வேட்பாளர் ஈ.எல். சேனாநாயக்கவிடம் தோல்வியடைந்து, தனது ஆசனத்தைத் தக்கவைத்துக் கொள்ளத் தவறினார்.

1965 இல் தமரா இளங்கரத்ன 6 ஆவது பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலகெதர தொகுதியில் போட்டியிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் டபிள்யூ. எம்.ஜி.டி.பண்டாவிடம் 574 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டார். இருப்பினும் அவர் 1970 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் 2,560 வாக்குகள் (மொத்த வாக்குகளில் 55% பெற்று) W.M.G.T. பண்டாவை தோற்கடித்து வெற்றி பெற்றார். (5) 1977 பாராளுமன்றத் தேர்தலில் அவர் W. M. G. T. பண்டாவிடம் 5,873 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இளங்கரத்ன 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி தனது 75 ஆவது வயதில் காலமானார்.

### செனற்சபை பெண் உறுப்பினர் சிஸ்ஸி குரே (OBE) -1947

சிஸ்ஸி குரே, OBE ஒரு இலங்கை சமூக சேவகர் மற்றும் இலங்கை செனட்டில் நியமிக்கப்பட்ட முதல் பெண் (முதற் பெண்களுள் ஒருவர்) ஆவார். குரே 1931 இல் லங்கா மகிளா சமித்தியவின் (Lanka Mahila Samitiya) இணை நிறுவனராக இருந்தார், இது நாட்டின் மிகப்பெரிய பெண்கள் தன்னார்வ அமைப்பாக மாறியுள்ளது. அவர் 35 வருடங்கள் உறுப்பினராகவும், 1943 மற்றும் 1953 க்கு இடையில் பத்து வருடங்கள் தலைவராகவும் இருந்தார். அவர் இலங்கையில் தாய் மற்றும் குழந்தை சுகாதாரத்துறையில் முன்னோடியாகக் கருதப்பட்டார். (லங்கா மகிளா சமிதி (LMS) 1930 இல் டாக்டர் மேரி ரத்தினத்தால் நிறுவப்பட்டது, இது கிராமப்புற நிலைமைகளை மேம்படுத்துதல் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமவாசிகளின் சமூக- பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பெண்கள் இயக்கமாகும்).

1941 ஆம் ஆண்டில் அவர் இலங்கையில் சமூக நலன்புரி சேவைகளில் பணியாற்றியதற்காக, பிரிட்டிஷ் பேரரசின் ஆணை அதிகாரியாக (Order of the British Empire) நியமிக்கப்பட்டார். குரே இலங்கை சமூக சேவை கழகம் மற்றும் பெண் வழிகாட்டி இயக்கத்திலும் செயற்பட்டார். அகில இலங்கை மகளிர் பௌத்த காங்கிரஸின் தலைவியாக ஒரு காலம் பணியாற்றினார்.

1947 இல் குரே இலங்கையின் செனட் உறுப்பினராக நியமிக்கப்பட்டார், 1952 வரை அவர் பதவியில் இருந்தார். சட்டமன்றத்தில் இருந்தபோது, கிராமப்புறங்களில் செவிலியர் கல்வி உட்பட உணவு வழங்கல் மற்றும் மருத்துவமனை பராமரிப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காக பணியாற்றினார்.

### இரண்டாம் பாராளுமன்றத் தேர்தலில் பெண்கள் பிரதிநிதித்துவம் -1952

1952 பொதுத் தேர்தலில், பன்னிரண்டு பெண்கள் தேர்தலில் பங்களிப்பு நல்கிய போதிலும், அவிசாவளைத் தொகுதியில் விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சியில் போட்டியிட்ட திருமதி குசுமாசிறி குணவர்தன, அக்குரஸ்ஸயில் லங்கா சமசமாஜக்கட்சியில் போட்டியிட்ட திருமதி டொரின் விக்கிரமசிங்க ஆகிய இருவர் மாத்திரமே வெற்றிபெற்றனர்.

குசுமாசிறி குணவர்தன, பிலிப் குணவர்தனவின் மனைவியாவார் இவர் 19, 414 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார். டொரின் விக்கிரமசிங்க, டாக்டர் எஸ்.ஏ. விக்கிரம[illegible] யாவார். இவர் 16,626 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார்.

### டொரின் விக்கிரமசிங்க பற்றி சில வரிகள்...

எஸ்.ஏ.விக்கிரமசிங்க இலங்கையின் இடதுசாரி அரசியல்வாதி ஆவார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தவர். 1931 இல் இலங்கை அரசாங்க சபைக்குத் தெரிவான முதலாவது இடதுசாரி அரசியல்வாதி இவராவார். விக்கிரமசிங்க டொரின் யங் என்னும் ஆங்கிலேய இடதுசாரிப் பெண்ணைத் திருமணம் புரிந்தார். டொரின் யங் பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து இலங்கை பாராளுமன்ற உறுப்பினரானார்.

இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் பங்கு கொண்ட பெண்களில் டொரினின் பங்களிப்பு மிகவும் காத்திரமான வரலாற்றுப் பாத்திரம் என்றால் அது மிகையில்லை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவான ஒரே ஒரு பெண்ணும் டொரின் தான்.

தன் தாய்நாடு ஆக்கிரமித்து இருந்த ஒரு நாட்டின் விடுதலைக்காகவும், அந்த மக்களின் விடிவுக்காகவும் தனது சொந்த நாட்டுக்கு எதிராக போராடிய கொள்கைப்பிடிப்பு மிக்க போராளி அவர். ஐக்கிய பெண்கள் முன்னணி என்கிற முதலாவது இடதுசாரிப் பெண்கள் இயக்கத்தையும் தொடக்கியவர் அவர் தான். பல முற்போக்கு விடுதலை அமைப்புகளை உருவாக்கிய முன்னோடி. டொரின் 20.05.2000 அன்று தனது 93 ஆவது வயதில் இறந்தார்.

### இரண்டாம் பாராளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போன பெண்கள் -1952

#### திருமதி கிளோடா ஜயசூர்ய - அவிசாவளை தொகுதி

அவிசாவளை தொகுதி தேர்தலில் இரு பெண்களுக்கிடையிலேயே போட்டி நிலவியது. அவர்களில் ஒருவர் விப்லவகாரி லங்கா சமசமாஜக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி யானைச் சின்னத்தில் போட்டியிட்ட குசுமாசிறி குணவர்தன (பெற்ற வாக்குகள் 19,414). மற்றையவர் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் கைச் சின்னத்தில் போட்டியிட்ட திருமதி கிளோடா ஜயசூர்ய (பெற்ற வாக்குகள் 18,485), இறுதியில் 929 மேலதிக வாக்குகளால் குசுமாசிறி குணவர்தன வென்றார். திருமதி கிளோடா ஜயசூர்ய முன்னால் அவிஸ்ஸாவெல தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பேர்னாட் ஜயசூர்யவின் மனைவியாவார்.

#### விவியன் குணவர்த்தன - களனி தொகுதி

களனி தொகுதியில் போட்டியிட்ட நால்வரில் இருவர் பெண்கள். ஒருவர் விவியன் குணவர்த்தன மற்றவர் விமலா விஜயவர்த்தன. இத்தொகுதியில் கைச் சின்னத்தில் போட்டியிட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் யானைச் சின்னத்தில் போட்டியிட்ட திருமதி விமலா விஜயவர்த்தனவுக்குமே பலத்த போட்டி நிலவியது, விமலா விஜயவர்த்தன ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மாமியார். இத்தொகுதியில் விவியன் குணவர்தன லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட போதும் குறைந்த வாக்குகளையே (பெற்ற வாக்குகள் 4,857) பெற்றார், இறுதியில் ஜே.ஆர். (பெற்ற வாக்குகள் 22,103) வெற்றி பெற்றார். விமலா விஜயவர்த்தன பெற்ற வாக்குகள் 15,868.

#### திருமதி. எஃபி ஜயதிலக்க - தெஹியோவிட்ட தொகுதி

தெஹியோவிட்ட தொகுதியில் விளக்குச் சின்னத்தில் போட்டியிட்ட தொழிற் கட்சி வேட்பாளர் திருமதி. எஃபி ஜயதிலக்க லங்கா சமசமாஜக் கட்சியின் வேட்பாளரான தனது சகோதரன் எட்மன் சமரக்கொடியுடன் போட்டியிட்டார். தொழிற் கட்சியைச் சேர்ந்த ஆர்.ஈ. ஜயத்திலக்கவை மணந்த எஃபி ஜயத்திலக்க (பெற்ற வாக்குகள் 982) இத்தேர்தலில் தனது சகோதரனிடம் தோல்வியுற்றார், எட்மன் சமரக்கொடி (பெற்ற வாக்குகள் 8,848) வென்றார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழிலுள்ள...

இச்சந்திப்பில் எமது மண்ணுக்காய் மரணித்த மாவீரர் தினமான இன்று யாழில் உள்ள வர்த்தக நிலையங்களை பிற்பகல் 2.00 மணியுடன் பூட்டி உரிமையாளர், ஊழியர்கள் மாவீரர் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நேரில் சந்தித்து எழுத்துமூலமாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அவர்கள் அது குறித்து சாதகமாக பரிசீலிப்பதாக வாக்குறுதி தந்திருப்பதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் இரத்தினம் சதீஸ் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் 219...

இதன்போது ஒரு வீடு முழுவதுமாகச் சேதமடைந்ததுடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

மஹஜன சம்பத
திகதி 2025.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 6025
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 6 3 1 9 5 3
அத சம்பத
E 1 9 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 0600
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 0141
மிதுனம் 02 40 60 9843

தன நிதானய
திகதி - 2025.11.26
சீட்டிழுப்பு இலக்கம் - 2055
V 71 74 78 82 V
Double Chance

மெகா பவர்
திகதி 26/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2373
V 02 03 24 33 34

ஜய
திகதி 2025.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 0293
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Y 3 2 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4267
சீட்டிழுப்பு திகதி 26.11.2025
C 10 26 58 68
C
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.26
சீட்டிழுப்பு இலக்கம் 1334
மேடம் 02 07 28 55 மேடம்

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ம-7,33)

## 100 போதை...

சுன்னாகம்பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## காய்ச்சலால்...

சல் மற்றும் வலிப்பால் பாதிக்கப்பட்ட 11 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் உயிலங்குளம் றோ.க.த பாடசாலையில் தரம் 7இல் கல்வி கற்கும் மன்னார் கொல்லங்குளம் பகுதியைச் சேர்ந்த காளிமுத்து நித்தியாஸ் (வயது-11) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

மாணவனுக்கு காய்ச்சல் மற்றும் வலிப்பு ஏற்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை (24) வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

தொடர்ந்தும் காய்ச்சல் வலிப்பு குறையாத நிலையில் மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (25) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

மரணத்திற்கான காரணம் கண்டறிய உடற்கூற்று மாதிரிகள் இரசாயன பகுப்பாய்விற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## ஐஸ் போதை...

இதன்போது அவர்களிடமிருந்து 290 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## வல்வெட்டித்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, வல்வெட்டித்துறை ஆலடிப் பகுதியில் உள்ள அவரது வீட்டின் முன்பாக கேக் வெட்டி கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கொண்டாட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவரின் பூர்வீக வீட்டினைச் சூழவுள்ள பகுதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்ட பதாகைகள் கா[illegible]பட்டு, வெடி

கொளுத்தி பெரியளவிலான கேக் வெட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அங்கிருந்தவர்களுக்கு இனிப்புக்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ம-7,33,60,104)

## தமிழ்த் தேசத்...

உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று தனது பாராளுமன்ற உரையின்போது தமிழினத்தின் இறைவனான மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு தனது பிறந்தநாள் வாழ்த்துகள் எனத் தெரிவித்திருந்தார். (ம-7)

## தீவிர காற்ற...

மழையுடனான காலநிலை தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் பிரதீபராஜா நேற்றிரவு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

அம்பாந்தோட்டைக்கு தென் கிழக்காக 70 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ள தாழமுக்கம் தற்போது தீவிர காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாறியுள்ளது. இது இன்று காலை அம்பாறை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்ந்து கிழக்கு கரையோரமாக நகர்ந்து எதிர்வரும் 28ம் திகதி மட்டக்களப்புக்கு மிக அண்மையாகவும், 29ம் திகதி திருகோணமலைக்கு அண்மையாகவும், பின்னர் முல்லைத்தீவுக்கு அண்மையாகவும் நிலை கொள்ளும் வாய்ப்புள்ளது.

இன்று(27) ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று எதிர் வரும் 29.11.2025 அல்லது 30.11. 2025 அன்று புயலாக மாற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே மலாக்கா நீரிணைக்கு அருகில் தோன்றியுள்ள புயலுக்கு சென்யார் எனப் பெயரிடப்பட்டுள்ளமையால், இந்தத் தாழமுக்கம் புயலானால் அதற்கு ஏமன் நாடு பரிந்துரைத்த டித்வா (Ditwah)- இயற்கையால் அமைந்த ஏரி எனப் பெயரிடப்படும்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு நேற்று கன மழை கிடைக்கப் பெற்றுள்ளது.

இன்று இரவு முதல் வடக்கு மாகாணத்தில் மழை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கும். வடக்கு மாகாணத்தில் 28, 29, 30ஆம் திகதிகளில் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மாகாணத்தில் தற்போது பலத்த காற்று வீசத் தொடங்கியுள்ளது. இது எதிர்வரும் 01.12.2025 வரை தொடரும்.

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 28 தொடக்கம் மிகக் கனமழை கிடைக்கத் தொடங்கும். ஏற்கெனவே வடக்கு மாகாணத்தில் சில சிறிய குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளன. கடனீரேரிகள் நீர் நிறைந்து முகத்துவாரங்கள் வெட்டி விடப்பட்டுள்ளன. ஆகவே வடக்கு மாகாணத்தின் தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். மிக வேகமான காற்று வீசுகையும் மிகக் கன மழையும் கிடைக்கும் என்பதனால் வடக்கு மாகாண மக்கள் இந்நாட்களில் மிக அவதானமாக இருப்பது சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
සුපිරි ධන සම්පත
26.11.2025 வெற்றி வாரம் 0733
ஆங்கில எழுத்து X மற்றும் வெற்றி இலக்கம் 9 2 0 6 9 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,515,116.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2999
சீட்டிழுப்பு திகதி 2025.11.26 தினம் புதன்கிழமை
03 65 75 78 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,079,066.40

சனிதா
திகதி 26.11.2025 வெற்றி வாரம் 5160
வெற்றி இலக்கங்கள் 01 06 33 61 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,402,078.00

சசிரி
வெற்றி வாரம் 829
சீட்டிழுப்பு திகதி 26.11.2025
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 14 16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ரூசி
சீட்டிழுப்பு வாரம் 4711
சீட்டிழுப்பு திகதி 26.11.2025 தினம் புதன்கிழமை
மிதுனம்
08 21 43 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,321,169.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 36 08 24 29 37
சீட்டிழுப்பு வாரம் 2175
26.11.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.609,999,758.20

අද කෝටිපති ADA KOTIPATHI
புதன் கிழமை
வெற்றி வாரம் : 2825
சீட்டிழுப்பு திகதி : 2025.11.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,685,562.40
07 50 60 69 Y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்...

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து உயிர் நீத்த முதல் போராளி லெப். சங்கர் (சத்தியநாதன்) இறந்த நவம்பர் 27ம் திகதியை தமிழீழ விடுதலைப் புலிகள் மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தினர். ஒவ்வொரு ஆண்டும் இதே திகதியில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உயிர் நீத்தவர்களின் உடல்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரியின் கைகளில் அகப்பட்டுவிடக் கூடாது. உயிர் நீத்தவர்களை முழுமையான இராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்வது, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என விடுதலைப் புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இந்த நடைமுறையை பேணி வந்தனர்.

1989ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் தினம் எனும் பெயருடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தங்களது உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூறும் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பொதுவாக மாலை 6.05 மணிக்கு அகவணக்கதுடன் மாவீரர் தின அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகும்.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடியலுக்காகவும் அரசாங்கத்துடன் போரிட்டு உயிரிழந்த போராளிகளை நினைவு கூரும் இந்த நாளில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4431)

076 825 7716 (ஆகாஸ்)


## மாவீரர் வார ஆறாம் நாளில்....



பளை பிரதான பேருந்து தரிப்பிடத்தின் அருகாமையில் அமைந்துள்ள நினைவாலயத்தில் நேற்று மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பும் நினைவேந்தலும் இடம் பெற்றன.



குடத்தனையில் இடம்பெற்ற மாவீரர் வார குருதிக் கொடை நிகழ்வு

வடமராட்சி கிழக்கில் மாவீரர் வார நினைவேந்தலும் உரித்துடையோர் கௌரவிப்பும் வேம்படி பொது மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது பொது ஈகச் சுடரினை உடுத்துறையைச் சேர்ந்த மாவீரரின் தந்தை பொன்.சிவலிங்கம் ஏற்றி வைத்தார்.




## மணப்பெண் தேவை

01. சித்தன்கேணி, இந்து, 1983, அனுஷம், London Graduated, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
02. திருநெல்வேலி, இந்து, 1989, அத்தம், BSc(Hons), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24452)
03. யாழ்ப்பாணம், இந்து, 1991, கார்த்திகை, Masters of Accounting and Finance, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43419)
04. கோண்டாவில், இந்து, 1990, அத்தம், Graduated, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (38579)
05. திருநெல்வேலி - சாவகச்சேரி, இந்து, 1992, கார்த்திகை, BSc(Hons) in IT, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. அளவெட்டி, இந்து, 1989, உத்திராடம், MSc in Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53552)
07. நெல்லியடி, இந்து, 1991, பூராடம், Graduated, USA citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(47452)
08. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், Computer science Graduated, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28386)
09. காரைநகர் - பருத்தித்துறை, இந்து, 1988, புனர்பூசம், MSc, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

(C-4432)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



## வீடு வாடகைக்குத் தேவை

சண்டிலிப்பாய், மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, தொட்டிலடி போன்ற இடங்களில் வணிக நோக்கத்திற்காக வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு :
077 204 3606

(1736)


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 13.02.1940 | உதிர்வு 26.11.2025

எமது பாடசாலையின் சுகாதாரமும் உடற்கல்வியும் பாட ஆசிரியர் பா.பிரதீபன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் பாலசிங்கம் பகவதி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1739)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

## திருகோணமலை...

திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நேற்றையதினம் நீதிபதி முகம்மட் ஷரீப் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்தரப்பில் எவரும் முன்னிலையாகாத நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தது.

இதன் பின்னரே வழக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4430)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237



## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடி மூளாய் றோட் உடுக்கியவளை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் 7 பரப்பு காணியில் பிரிவிடல் செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் 3 பரப்பு 5 குளி உடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
+61401107584 | 077 248 7024

(6019)



## தேவை

சுயமாக இயங்கக் கூடிய மனநலம் குன்றிய பெண் ஒருவரை பராமரிப்பதற்கு ஆள் தேவை.

சம்பளம் : 50,000/=

077 308 6894

(C-4429)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.